மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

92—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***2541—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சியிலுள்ள அருள்புரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி, அருள்புரம் உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் அனைவருக்கும் தரமான கல்வியைத் தந்து, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்க, அயராது உழைத்துக் கொண்டிருக்கும் எங்கள் தாயே, காவேரியை*

2016 ஆகஸ்ட் 19]

மீட்டெடுத்து, மேகதாதுவில் காவேரி ஆற்றின் குறுக்கே அணையைக் கட்ட விடமாட்டேன் என வீர சபதம் ஏற்றிருக்கும் எங்கள் வீரத் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) வள்ளல்களுக்கெல்லாம் வள்ளலாக, குறுவை, சம்பா சாகுபடி பயிருக்கும், தரிசு நிலங்களை வளமாக்கவும், நிதியை ஒதுக்கித் தந்து, வேளாண்மையில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சியில், அருள்புரத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசு உயர்நிலைப் பள்ளியில், 300–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றார்கள். அருள்புரம், அரசு உயர்நிலைப் பள்ளி அமைந்திருக்கின்ற கரைப்புதூர் ஊராட்சியிலே, நான்கு நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 5 ஆரம்பப் பள்ளிகளில், கிட்டத்தட்ட 1,000–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றார்கள்.

அருள்புரம், அரசு உயர்நிலைப் பள்ளியானது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2002 ஆம் ஆண்டிலே ஆரம்ப பள்ளியாகத் துவக்கப்பட்டு, 2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலேயே நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு, அது உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டு RMSA *திட்டத்தின் மூலமாக, அரசு வழங்கிய ரூபாய் 58 இலட்சத்தோடு, பொதுமக்களின் பங்களிப்பையும் சேர்த்து 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 12 வகுப்பறைகள், ஆய்வகங்களுடன்கூடிய நல்ல தரமான கட்டடம் கட்டப்பட்டுள்ளது.*

மேலும், அந்தப் பகுதியிலே சாயப் பட்டறைத் தொழிற்சாலைகளும், பனியன் தொழிற்சாலைகளும் நிறைந்து இருக்கின்ற காரணத்தாலே, வெளி மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் அங்கே நிறைய பேர் தங்கி வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுடைய குழந்தைகளெல்லாம் உயர் கல்வி கற்பதற்கு தனியாருடைய பள்ளிகளிலே சேர்வதற்குக் கட்டணம் செலுத்த முடியாத நிலையிலே இருக்கின்ற காரணத்தினாலும், அருள்புரம் உயர்நிலைப் பள்ளி மற்றும் கரைப்புதூர் ஊராட்சியில் இருக்கும் மாணவ, மாணவிகள் மேல்நிலைக் கல்வி பயில

9 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருப்பூர் அல்லது பல்லடம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பெண்கள் கல்விக்காக முன்னுரிமை தந்து, நல்ல பல திட்டங்களைத் தந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே, அந்த விதிகளைத் தளர்த்தி, அருள்புரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை நிலை எண் 235, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24–5–1997–ல் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்தும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவ்வரசாணையின்படி, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த பின்வரும் நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்:*

அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பொதுமக்கள் பங்குத் தொகை 2 இலட்சம் ரூபாய் செலுத்தியுள்ள பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்; மகளிர் பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்; மலைப் பகுதி, ஆதி திராவிடர் மக்கள்தொகை அதிகம் உள்ள இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

முற்பகல் 10–40

அரசாணை நிலை எண் 49, பள்ளிக் கல்வித் துறை, நாள் 1–3–2007–ல் குறிப்பிட்டுள்ளபடி, கீழ்க்கண்டவாறு நிலப்பரப்பு இருத்தல் வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளுக்கு 6 கிரவுண்டு, மாவட்டத் தலைமை இடங்கள் 8 கிரவுண்டு, நகராட்சிப் பகுதிகளுக்கு 10 கிரவுண்டு, பேரூராட்சிப் பகுதிகளுக்கு 1 ஏக்கர், ஊரகப் பகுதிகளுக்கு 3 ஏக்கர், 10 ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 100 மாணவர்கள் இருத்தல் வேண்டும். ஒரு மேல்நிலைப் பள்ளிக்கும் அடுத்த மேல்நிலைப் பள்ளிக்கும் குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டர்

2016 ஆகஸ்ட் 19]

தூரம் இருத்தல் வேண்டும். இதற்கென விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், தேவையின் அடிப்படையிலும், மக்களுக்கு அதிகமாகப் பயன்படும் இடங்களைக் கருத்தில்கொண்டும், அந்தந்த மாவட்டத்தில் உள்ள பிற்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள் அதிகம் பயன்படுவதைக் கருத்தில்கொண்டும் மற்றும் அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டும் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விதிகளைக் குறிப்பிட்டு, ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு பொதுமக்களுடைய பங்களிப்புத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் இருக்கின்ற பொதுமக்கள் இரண்டு இலட்சம் ரூபாயைச் செலுத்துவதற்கும் தயாராக இருக்கின்றார்கள். போதுமான இடவசதியும் அங்கே உள்ளது. அந்தப் பள்ளியில் சுற்றுச்சுவர், கழிப்பிட வசதி உட்பட அனைத்து வசதிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அந்தப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை மட்டும்தான் குறைவாக உள்ளது. அருகாமையில் இருக்கின்ற பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, தரமான கல்வியினைத் தருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கின்ற வகையில், வருகின்ற ஆண்டில், பெண்கள் மேல்நிலைப் பள்ளியாவது அமைத்துத்தர வேண்டுமாய்த் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் துறை அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முன்னுரிமை அடிப்படையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்*

தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

93—

தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம்

*906—**திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலேயே தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாட்டில் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) வினாக்கள்— விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]